ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பிரமாதீச
ஆவணி

செப்டம்பர்
1973

தொகுதி 35
பகுதி 9

Vol. 35
No. 9

ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

சோர்வு நீங்க	...	161
ஔஷத குணம்	...	163
வாதகண்டகம்	...	167
தமகச்வாஸம்	...	170
பகந்தர சிகித்ஸை	...	174

வருஷச் சந்தா
ரூ 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன்

	போன் நெ. 31
நர்ஸிங்ஹோம்	போன் நெ. 44
தலைமை வைத்யர்	போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி	(வீடு) போன் நெ. 27
	(ஆபீஸ்) போன் நெ. 61
மானேஜர்	(வீடு) போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம (போன் 33026)
8. திருவனந்தபுரம (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும் எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

தொகுதி 35	பிரமாதீச - ஆவணி	பகுதி 9
Vol. 35	செப்டம்பர் 1973	No. 9

श्री धन्वन्तरये नमः

சோர்வு நீங்க

நமது மஹாமண்டலம் இன்று அடைந்திருக்கும் தளர்ச்சி மிக பயங்கரமானது. கும்மிருட்டாகத் தோன்றும் இரவிற்கும் ஓர் விடிவுண்டு. ஆனால் அதை எதிர்பார்த்துத் தளர்ச்சியுறாத உள்ளத்திற்குத் தான் இரவின் மௌனம் அச்சுறுத்தாது. விடிவை எதிர்பார்த்து முன் பணிகளின் தொடர்பைப்பற்றிச் சிந்திப்பதும் மனத்திற்குத் தெம்பூட்டும். தமிழ்நாட்டில் ஆயுர் வேதத்தின் வருங்காலம் சீரியதாகவே இருக்கக்கூடும். தற்போதுள்ள பயங்கர அமைதி மாறி, சுறுசுறுப்புடன் இயங்கத்தக்க சூழ்நிலை அமையக்கூடும்.

இளைஞர்களாக உள்ள ஆயுர்வேத வைத்தியர்கள் மஹா மண்டலப் பணிகளில் அதிகம் ஈடுபட்டால் தான் மஹாமண்டலம் சிறப்பாக இயங்க முடியும். மற்ற அரசியல் அரங்குகளில் காணப் பெறும் முதியவர் ஆதிக்கம் போன்ற குறைகள் இங்கு இருப்பதற் கில்லை. இளைஞர்கள் மஹாமண்டலப் பணிகளில் அதிகம் ஈடுபட்டு மஹாமண்டலத்திற்குத் தற்போது ஏற்பட்டுள்ள தளர்ச்சியை நீக்க வேண்டுகிறோம்.

சிறந்த வைத்தியர்களின் மறைவு :

நமது மஹாமண்டலம், திருச்சி ஆயுர்வேத ஸபை முதலிய ஸ்தாபனங்களின் ஸ்தாபகர்களில் ஒருவர் என்ற அளவிற்கு அவை களுடன் நீண்ட நிலேத்த தொடர்புகொண்ட கரூர் வைத்தியர் A. K. ராகவேந்திராசார் அவர்களின் மறைவிற்கு நமது ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து மறைந்த அன்னாரின் நினைவிற்கு அஞ்சலி செலுத்துகிறோம். மைசூர் ஆயுர்வேத வைத்திய பரம்பரையில் சிறந்த ஸ்ரீ ரங்காசார் அவர்களிடம் குருகுலவாசமிருந்து கற்று கரூரில் 1922 முதல் ஆயுர்வேத வைத்தியராகப் பணியாற்றியவர். அவரது சம்சாரம் ஸ்ரீமதி கோபியம்மாள் அவர்களும் சிறந்த குழந்தை வைத்தியராவார். 45 வருஷ காலம் தொடர்ந்து வைத்தியத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர் கடந்த 6, 7 ஆண்டு களாகத் தம்து குமாரர் ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன் L.I.M. அவர்களிடம் அப்பொறுப்பை ஒப்படைத்து ஓய்வு பெற்றிருந்தார். சிறந்த ஸம்ஸ்கிருத வித்துவான். அவரது மறைவு ஆயுர்வேத உலகிற்கு பெருத்த நஷ்டமாகும்.

திருநெல்வேலி வைத்யர் ஸ்ரீ N. ராகவன் வைத்யர் அவர்கள் அண்மையில் காலமானதுபற்றியும் வருந்துகிறோம். மஹா மண்டலத்தின் நீண்டகால அங்கத்தினர் அவர். மிகச் சிறந்த பணியாற்றியவர். அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம். அவரது குமாரர் வைத்ய ஸ்ரீ R. பாபு அவர் களுக்கும் குடும்பத்தாருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

த. ஆ. மஹாமண்டல நிர்வாஹ ஸமிதிக் கூட்டம்

நாளது 23—9—73 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் (31-A. சின்னக்கடைத்தெரு, திருச்சி-2) மஹாமண்டலத்தின் நிர்வாஹ ஸமிதிக் கூட்டம் நடைபெறும். யோசிக்கவேண்டிய விஷயங்களாவன :—

1. வைத்திய சந்திரிகை நிர்வாஹம்.
2. அடுத்த மகாநாடு நடத்துவது.
3. இதர அவசர விஷயங்கள்.

அங்கத்தினர்கள் அவசியம் கலந்துகொள்ளக் கோருகிறோம்.

A. ராகவராவ்,
பொதுக்காரியதரிசி.

ஔஷத குணம்

முக்தாதியோகம்

ராய்ப்பூர் இந்துபூஷ பிகாரே என்ற வைத்யர் தமது அனுபவத்தில் டைபாய்டு முதலிய கடும் ஜ்வரங்களில் 24-48 மணி நேரத்திற்குள் ஜ்வரதாபத்தை நன்ருகக் குறைக்க வல்ல முறை ஒன்றைத் தெரிவித்திருக்கிருர்.

அது பின் வருமாறு :— " முக்தாதிவடி 15 யவம், சந்திர கலா ரஸம், 15 யவம், ச்ருங்க பஸ்மம் 15 யவம், பவழ பஸ்மம் 15யவம், ஸிதோபலாதி சூர்ணம் 45 யவம் இவைகளைச்சேர்த்து 9 பொட்டணமாக்கிக் கொண்டு சர்க்கரை ஜலத்துடன் ஜ்வர வேகம் 101 டிகிரிக்கு மேலாஞல் 2 மணிக்கொரு தடவையும் கீழாஞல் 4 மணிக்கொரு தடவையும் கொடுக்க ஜ்வரம் இறங்குகிறது. ஜ்வரம் தணியும் வரை ஜலத்தைத் தவிர வேறு ஆகாரம் கொடுக்கக் கூடாது."

இதில் குறிப்பிடப் பட்டுள்ள யோகங்களில் சந்திரகலாரஸம் முக்தாதிவடி என்ற இரண்டு யோகங்களின் செய்முறை விவரங் களை இங்கு தருகிரேம்.

முக்தாதிவடி : ஸித்தயோக ஸங்கிரஹத்திலுள்ளது. முத்து பிஷ்டி 2 தோலா, தங்கரேக்கு ½ தோலா, வெள்ளி ரேக்கு 1 தோலா, நாககேஸரம் 2 தோலா, தாமரைப் பூவினுள்ளுள்ள கேஸரம் ஒரு தோலா, ரோஜாப்பூவினுள்ளுள்ள மொக்கின்மேல் உள்ள கேஸரம் ஒரு தோலா, குங்குமப்பூ ½ தோலா, பச்சைக் கற்பூரம் ¼ தோலா, கஹ்ரூபா பிஷ்டி 1 தோலா, ஜஹரமோஹரா கதாயி 1 தோலா, ஸங்கேயசப் 1 தோலா, கோரோசனை ஒரு தோலா, கர்பூர சிலாஜது பஸ்மம் 12¼ தோலா இவைகளில் ரேக்குகளைத் தவிர மற்றவைகளைக் கல்வத்திலிட்டு அரைத்துக் கொண்டு ரேக்குகளையும் ஒவ்வொன்ருகப் போட்டு பன்னீர்விட்டு 8 நாள் அரைத்து 4-4 யவ அளவு மாத்திரைகள் செய்து கொள்ளவும்.

அளவு ஒரு மாத்திரை பசுவின் பால் அல்லது தாய்ப் பாலுடன் கொடுக்கலாம்.

சிசுக்களுக்கு இது அம்ருதம் போன்றது. நாட்பட்ட ஜ்வரம், காங்கை, கணைச்சூடு, பால் ஜீர்ணமாகாமல் அப்படியே வெளி

யாகுவது, இருமல், இளைப்பு, இவைகளில் மிகவும் நல்லது. பெரியோர்களுக்கும் காங்கை, சோகை - முதலியவைகளில் மிகவும் சிறந்தது.

இதில் சேர்ந்துள்ள ஜஹரமோஹரா (நாகபாஷாணம்) ஸங்கேயசப் (ஹரிதபாஷாணம்) கஹ்ரூபா (திருணகாந்தமணி) இவைகளை முறைப்படி சுத்தி செய்து பிஷ்டியாக அரைத்துக் கொள்ள வேண்டும். முத்தைப் பன்னீர் விட்டரைத்துப் பிஷ்டி யாக்கிக் கொள்ள வேண்டும்.

சந்திரகலா ரஸம் : ஸித்தயோக ஸங்கிரகத்திலுள்ளது. சுத்த ரஸம், தாம்ர பஸ்மம், அப்ரக பஸ்மம், கடுகுரோகிணி, சீந்திற் சக்கரை, பர்படகம், விலாமிச்சைவேர், திப்பிலி, சந்தனம், நன்னாரி இவை வகைக்கு ஒரு தோலா, கந்தகம் 2 தோலா, முத்து பிஷ்டி 2 தோலா, இவைகளில் ரஸத்தையும் கந்தகத்தையும் அரைத்து கஜ்ஜலி செய்து கொண்டு பிற்பாடு பஸ்மம், மற்ற சரக்குகளையும் சேர்த்து அரைத்து கோரைக்கிழங்கு, இனிப்பு மாதுளை, அருகம் புல், தாழம்பூ, தாமரைப்பூ, நெய்சட்டிப் பூண்டு, தண்ணீர்விட் டான்கிழங்கு, பர்படகம் இவைகளின் கஷாயம் அல்லது சாறுவிட்டு ஒவ்வொரு பாவனை செய்து அரைத்துக் கடைசியில் திராக்ஷை கஷாயம் கொண்டு 7 பாவனைகள் செய்யவும். ஒவ்வொரு பாவனை யின் முடிவிலும் ஒருநாள் அரைத்து நிழலிலுலர்த்திப் பின்னர் மறு பாவனை செய்யவும். கடைசியில் ஒரு தோலா பச்சைக் கற்பூரம் சேர்த்துக் கடலையளவு மாத்திரை உருட்டி நிழலிலுலர்த் திக்கொள்ளவும்.

அளவு-அனுபானம் : 1-2 மாத்திரை காலை மாலை சாப்பிட்டுக் குளிர்ந்த ஜலம், உசீராஸவம், அசோகாரிஷ்டம், பூசணிச்சாறு இவைகளில் ஒன்றுடன் சாப்பிடவும்.

நல்ல ரஸாயனம், பித்த—வாதபித்தஜ ரோகங்களில் மிகச் சிறந்தது. உட்காங்கையும் வெளிக்காங்கையும் குறைக்க வல்லது. சரத்ருது – கிரீஷ்மருதுக்களில் (ஆனி ஆடி ஐப்பசி கார்த்திகை) மாதங்களில் மிகவும் நல்லது. ஜ்வரம் கடுமையான தாபம், தலை சுற்றுதல், மூர்ச்சை, பெரும்பாடு, பிரதரம், ரக்த பித்தம், ரத்த வா தி, நீர்ச் சுருக்கு இவைகளில் சிறந்தது.

சந்திரகலாரஸத்தின் விசேஷ சக்தி ரக்த ஓட்டத்தை நிர் வகிக்கும் நரம்புகளில் காணப்படும்- ரத்தத்தில் கெட்ட பித்தம் சேரும்போது ரத்த அமுக்கம் அதிகமாகி, உட்காங்கை, மேல் காங்கை, தலைசுற்றல் மயக்கம், ரத்தக்கெடுதி, ரத்த தமனிகளின்

பலக்குறைவு முதலிய உபத்ரவங்கள் ஏற்படுகின்றது. இந்நிலையில் ரத்த ஓட்டத்தைக் கவனிக்கும் நரம்புகளை சமனப்படுத்தியும் கெட்ட பித்தத்தை வெளியாக்கியும், ரத்த சுத்தி செய்தும் சந்திரகலா ரஸம் நன்கு பயன்படுகிறது.

பித்தத்தால் ஏற்படும் நீர்ச்சுருக்கு, நீர்க்கட்டுகளில் எரிச்சலுடன் சிறிதளவு சிறுநீர் வெளியாதல், வயிற்றுவலி, மூத்ர நாளத்தில் எரிவு, உட்காங்கை இவை ஏற்படும்போது சந்திரகலா ரஸம் பெரிதும் பயன்படுகிறது.

அக்னிமந்தம் காரணமாக ஆகாரம் ஜீரணமாகாமல் மப்பு ஏற்பட்டு அதில் ஏற்படும் விஷவாயு மேனேக்கித் தலை சுற்றல், மயக்கம் முதலியவைகளை ஏற்படுத்தும் வகையில் ரத்தத்துடன் கலந்து அதைக் கெடுக்கும்போது ரத்த சுத்திக்கு இது நல்லது.

ப்ளட்பிரஷரில் (ரக்த தமனீ சைதில்ய நோயில்) ஏற்படும் கண்களில் சிகப்பு, முகம் சிவத்தல் தலையில் ரத்த சிரைகள் புடைத்திருத்தல், எரிச்சல், மயக்கம், தலைசுற்றுதல், பிதற்றல் இவைகளிலும் இது நல்லது.

பித்தம் மிகுந்த ஸந்நிபாத ஜ்வரத்தில், தாங்கமுடியாத ஜ்வர தாபம் ஏற்படும்போது மயக்கம் கண்கள் சிவத்தல், தலைகனத்தல், தலைவலி, பிடரிவலி. தலை ஆட்டம், பேசமுடியாமை போன்றநிலை ஏற்படும்போது ஸந்நிபாத ஜ்வர மருந்துகளுடன் சத்திரகலா ரஸமும் சேர்த்துக் கொடுக்க நல்லது.

சரீரத்தில் சூடு மிகுந்து கண் மூக்கு முதலியவைகளில் எரிச்சலும் சிறிது ரத்தக்கசிவும் ஏற்படும்போது ரத்தம் நீர்த்துப் போகும் நிலையைத் தவிர்க்க, சந்திரகலாரஸம் ஒரு மாத்திரை. திப்பிலி சாம்பல் 2 யவம், பவழபிஷ்டி 2 யவம். கல்கண்டுத்தூள் ½ தோலா, இவைகளைப் பாலுடன் கொடுக்க நல்லது. விலாமிச்சை, நன்னாரி, வெட்டிவேர் இவைகளின் பாண்ட கஷாயம் அனுபானமாக்கிக் கொள்ளலாம்.

க்ஷயநோயில் இரண்டாம் நிலையில் மிகுந்த இருமல், கடுமையான ஜ்வரம், ரத்தவாந்தி, துர்பலம் ஏற்படும்போது ரத்தத்தை வெளியாகாமல் தடுக்கும் முதற்பணியில் சந்திரகலாரஸம், பவழபிஷ்டி, சீந்திற் சர்க்கரை இம்மூன்றையும் தாடிமாவலேஹம் அல்லது மாதுளம்பழ சர்பத்துடன் கொடுக்க நல்லது.

ரத்த பித்தத்தில் பித்தத்தின் தீக்ஷ்ண குணம் அதிகமாவதால், ரத்த சிரைகளிலுள்ள கலையெனும் கபஜவ்வு இளகி இடம்

கொடுத்துவிட ரத்தம் மூக்கு வாய் காது முதலிய துவாரங்கள் வழியே வெளியாகிறது. தலைவலி, வயிற்றுவலி, வாந்தியில் ரத்தம், உடல் எரிச்சல், வயிற்றெரிச்சல், முதலிய பித்தப்ரகோப லக்ஷணங்கள் காணும்போது இதன் உபயோகம் நல்ல பலனளிக்கும்.

இம்மாதிரி ஸ்திரீகளுக்கு மாதவிடாய் காலத்தில், மற்ற காலங்களிலும் ஏற்படும் பெரும்பாடு, பித்தப்பிரமேகம் போன்ற நிலைகளிலும் இதன் உபயோகம் சாலச் சிறந்ததாகும்.

இதிலுள்ள ரஸகந்தக-கஜ்ஜலி சீக்கிரம் சரீரத்தில் பரவக்கூடிய சிறந்த ரஸாயனம். தாம்ரம், பித்தத்தைச் சுத்தி செய்து வெளியாக்குவதுடன், பித்த ஸ்தானத்திற்கு சக்தி அளித்து கல்லீரலிலிருந்தும் அளவிற்கு அதிகமாகப் பித்தம் வெளியாவதைத் தடுக்க வல்லது. அப்ரகம் ரஸாயனம், ஸூக்ஷ்மமான ஸ்ரோதஸ்ஸுகளில் சீக்கிரமாகப் பரவக் கூடியது பித்த சமனமும் வாத சமனமும் செய்ய வல்லது. கோரைக் கிழங்கு மப்பைப் போக்க வல்லது. தாழம்பூ, சிறுநீரைப் பெருக்கி, எரிச்சலை அடக்கி நல்ல சக்தியை அளிக்கும். கடுகுரோகிணி பித்தத்தை வெளியாக்கிக் கல்லீரலுக்கு சக்தி அளிக்கும். சீந்திற் சர்க்கரை பித்த எரிவைப் போக்க வல்லது.

இது ஒரு சிறந்த ரஸாயன யோகமாகும்.

பகந்தர சிகித்சை — (175-ம் பக்கத் தொடர்ச்சி)

கொம்பரக்கை நன்றாக இடித்துத் துணியில் சலித்து ஒரு தோலா எடுத்து 2 அவுன்ஸ் ஸ்பிரிட்டில் கரைத்துக் குலுக்க கொம்பரக்குத் திரவம் தயாராகும். இதில் உள்ள கொம்பரக்கு துணியைப் புண்ணில் ஒட்டுகின்றது. இதில் நனைத்த துணியை 12 மணி நேரம் கட்டி வைத்திருந்த பின்னர் ஏதாவது ஒரு எண்ணெய்யில் துணி அல்லது பஞ்சால் துடைக்க இது விட்டுவிடும். அதிலுள்ள முளையை எடுக்க துரிசைச் சுட்டு ஜலம் விட்டு அரைத்து புண்மேல் கெட்டியாகப் பற்றுப் போட்டு 15 நிமிஷங்கள் வைத்திருந்து பிறகு தயிர் தெளிவல்லது காடி விட்டலம்பிவிடவும். மூல நோயில் உபயோகமாகும் களிம்பை உள் தடவி கட்டுப் போடவும். புண்ணை தினமும் 2 தடவை வேப்பிலை கஷாயம் விட்டலம்பவும். பிறகு சிவப்பு களிம்பு போட்டுக் கட்டிவர ஒரு மாதத்திற்குள் நன்கு குணமாகும்.

வாதகண்டகம்

(வைத்ய ரணஜிதராய்)

[தொழிலனுபவத்தையும் சாஸ்திரத்தில் ஏற்பட்டுள்ள நுட்பமான அறிவையும் பயன்படுத்தி ஸமந்வயம் செய்து பார்க்கும் திறன்படைத்த வைத்யர்களில் ஆசார்ய ரணஜிதராய் முக்கிய இடம் பெறுகிறார். பல கிரந்தங்களை ஸமந்வய ரீதியில் எழுதிப் புகழ் பெற்ற இவ்வாசிரியர் ஸசித்ர ஆயுர்வேத பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்,

—ஆசிரியர்]

வாதகண்டகம் எனும் பெயருடன் ஒரு நோயின் ஸம்பிராப்தி ஸுச்ருதரின் நிதான ஸ்தானத்திலும், அஷ்டாங்க ஹிருதய நிதான ஸ்தானத்திலும் குறிப்பிடப்படுகின்றது. இரண்டிலும் சற்று வேற்றுமை காண்கிறது. மாதவர் அஷ்டாங்க ஹிருதயத்தையே பின்பற்றுகிறார். இவர்கள் கொடுத்துள்ள நோய் உருவம் பின்வருமாறு!

இது ஒரு வாதரோகம். பாதமும் கணுக்காலும் சேருமிடத்தில் குதிகாலில் இந்நோய் உண்டாகின்றது. கணுக்கால் பாதப்-பூட்டிற்கு குடகம் எனப்பெயர் உண்டு. கால்களை சமமில்லாத தரையில் வைக்கும்போதும் அல்லது உடலில் ஏற்படும் களைப்பு காரணமாகவும் குதிகாலில் வாயு சேர்ந்துகொண்டு வலி ஏற்படுகிறது. இதற்கு குடகவாதம் வாதகுடகம் எனப்பெயர்.

சரகஸம்ஹிதையில் 80 வாத ரோகங்களில் இது கூறப்படவில்லை. காசியப ஸம்ஹிதையில் இது குறிப்பிடப்படுகின்றது, வாதகுட்டதா எனும் நோய் சரகஸம்ஹிதையில் (ஸூ. 20 அ.) கொடுக்கப் பட்டுள்ளது. இதன் விளக்கத்தை உரையில் காணோம். ஆனால் சிகித்ஸாஸ்தானத்தில் வாதகுடதா - குல்பவாததா- ஸந்திகதவாததா- என (சி. 29) விவரணம் கொடுக்கப்பட்டுள்ளது. வாதரக்தத்திற்கும் க்குடம் என மாற்றுப் பெயர் கொடுக்கப் படுகின்றது. குட என்ற சொல்லிற்கு பூட்டு எனப் பொருள் தரப்படுகின்றது. அதனால் பூட்டில் ஏற்படும் வாயு எனப் பொருள் ஏற்படுகின்றது. காசியபஸம்ஹிதையில் வாதகுடம் வாத குல்பம், வாதகண்டகம், குல்பக்ரஹம் என நான்கு நோய்களை 80 நோய்கள் கூறும்போது குறிப்பிடுகிறார். சார்ங்கதரர் வாதகண்டகத்தை 80 நோய்கள் கூறும்போது கூறுகிறார்.

உரையாசிரியர் ஆடமல்லர் இதை குடவாதம் எனக்கூறுவது உண்டு என்கிறார். ஆக குடவாதம் குல்பவாதம் இவைகளைப் போல வாத கண்டகமும் தனி நோய்தான். ஆனால் குதிகால் பூட்டில் உண்டாகும் வாயுவால் ஏற்படும் வலி என்றபொது விஷயத்தை முன்னிட்டு ஒன்றிற்கொன்று பர்யாயமாக நினைக்கப் பட்டுள்ளதென்று தோன்றுகிறது. குல்பவாதம், வாத கண்டகம், வாதரக்தம் இம்மூன்றும் தனித்தனியான நோய் நிலையே.

இது விஷயமாக எனக்கு ஏற்பட்ட சிறிதளவு அனுபவத் தையும் அதன்பேரில் எனது கல்பனையையும் இங்கு கூற விரும்பு கிறேன்.

ஒரு நண்பரின் மனைவிக்கு இடது குதிகாலில் வலி ஏற்பட்டு நடக்கும்போது கடுமையான வலி கண்டது. உள்ளூர் டாக்ட ரிடம் காட்டி எக்ஸ்ரே படம் பிடித்ததில் குதியில் எலும்பில் ஊசி போன்று வளர்ச்சி இருப்பதனால் (Calcaneal Spur Osteophyte) ஏற்பட்டது என நிர்ணயித்து சஸ்திர சிகித்ஸையும் டீப் எக்ஸ் ரேயும் எடுத்துக்கொள்ள ஆலோசனை அளிக்கப்பட்டது. சஸ்திர க்ரியைக்கு சம்மதிக்காததால் என்னிடம் சிகித்ஸைக்கு வந்தார்கள். ஆயுர்வேதப்படி இதை நிதானிக்க முடியாததால் முதலில் மறுத் தாலும் பின்னர் நிர்பந்தத்தால் ஏற்றுக்கொண்டு சிகித்ஸை செய்தேன்.

ஆழ்ந்த இடத்திலுள்ள அஸ்திவிருத்திக்கு வாலுகா ஸ்வேதம் (மணல் ஒத்தடம்) அதிக பயன் அளிக்கலாம் என நினைத்து அதைத் தொடர்ந்து 3 மாதங்கள் செய்யவும், காலை மாலை கால் ரூபாய் இடை வெந்தயத்தூளைச் சாப்பிடவும் செய்து வந்ததில் வியாதி குணமாயிற்று.

இந்த சிகித்ஸை ஆரம்பித்த சில நாட்களுக்குள்ளேயே நோயாளிக்கிருந்த கடி க்ரஹம் (இடுப்புப் பிடிப்பு) விட்டு விட்டது. தினம் படுக்கையை விட்டெழுந்தவுடன் நிமிரவும் நடக்கவும் முடியாதிருந்த நிலை மாறி இடுப்பு வளைந்து நிமிருவதில் ஏற்பட்டு வந்த சிரமம் நீங்கியது. இரண்டு மாதங்களில் கிரமமாக வலி குறைந்தது. மூன்று மாதங்களில் பூர்ணமாக குணமாகியது.

மற்றொரு நோயாளிக்கும் இதே நோய் இதே சிகித்ஸையில் குணப்பட்டுள்ளது. மற்றொரு பெண் நோயாளிக்கு குதிகால் எலும்பின் பின்புறத்தில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாது சிரமப்பட்டாள். பசுவின் நெய் தடவினால் வலி சாந்தமாகும். தொடர்ந்து இந்த சிகித்ஸையுடன் பசுவின் நெய் தடவிவர வியாதி பூர்ணமாய் குணமானது.

இந்த அனுபவத்தின் ஆதாரத்தில் இந்நோயை வாதகண்டகம் எனக் குறிப்பிடலாம் எனக் கல்பனை தோன்றியது. குதிகால் எலும்பில் ஊசிபோன்று நிமிர்ந்தும் வளைந்தும் காணப்படும் வளர்ச்சி தான் இந்நோய்க்குக் காரணம். கூரான முள்போன்று வளைந்தோ நீண்டோ ஏற்படக்கூடிய இவ் வளர்ச்சியை கண்டகம் என ஆயுர்வேதம் குறிப்பிடுகின்றது. இம்மாதிரி கண்டகம் போன்ற வளர்ச்சி எவ்விடத்தில் ஏற்பட்டாலும் அங்கும் கண்டகம் என்றே குறிப்பிடலாம் எனத்தோன்றுகிறது. குதிகாலில் அதிகம் ஏற்படுவதால் வாதகண்டகம் குதிகாலில் ஏற்படும் நோய் என்ற பாகுபாடு ஏற்பட்டுள்ளது.

வெந்தயம் இந்நோயில் மிகவும் குணம் தருகின்றது. 24 மணி நேரம் ஜலத்தில் ஊறவைத்து முளைவிட்டதும் எடுத்து உபயோகிப்பது மிகவும் குணம் தருகிறது. வெந்தயம் சிறிதும் பெரிதுமாக இரண்டு வகை. இரண்டும் நல்லதே கீரையாகவும் உபயோகிக்கலாம். வெந்தயம் மலத்தைக் கட்டும். வெந்தயக் கீரை மலத்தை இளக்கும்.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

தமகச்வாஸம்

(வைத்ய. ராமசிரோமணி த்விவேதி, ஆயுர்வேதாசார்ய)

[பம்பாயிலுள்ள பொத்தார் ஆயுர்வேதசாலையில் பிரதான சிகித்ஸகராக இருக்கும் இவர் தமகச்வாஸத்தில் தமது அனுபவத்தை ஸசித்ர ஆயுர்வேத பத்திரிகையில் வெளியிட்டுள்ளதை இங்கு தருகிறோம். தமகச்வாஸம் என்பது ஆஸ்துமா வகுப்பிலுள்ள சுவாஸ காஸ யோகத்தை குறிப்பிடுகின்றது. — ஆசிரியர்.]

தமகச்வாஸம் என்பது முக்யமாக கபவாதப் பிரகோபத்தினுல் ஏற்படுகின்றது. கபமும் வாயுவும் கெட்டு அக்னி மந்தத்தால் ஆஹாரம் பூர்ணமாகப் பாகமாகாமல் ரஸதாதுவாக மாறும்போது அபக்வமான ரஸமே உட்சென்று, அபக்வரஸத்தினின்றும் பிரியும் மலமான கபம் அதிகமாவதாலும் உணவு ஜீர்ணமாகாமல் பெருங்குடலில் சேரும்போது மலமாகப் பிரியும் தருணத்தில் வாயுவும் அதிகமாவதாலும் இந்நோய் ஏற்படுகின்றது. பித்த ஸ்தானத்தில் வாத கபங்களின் தோஷம் அதிகமாவதால் இது ஏற்படுகின்றது – என சரகர் கூறுவது ஜீர்ண சமயத்தில் ஏற்படும் நிலைகேட்டை விளக்கும்.

கபவாதாத்மகாவேதௌ பித்தஸ்தானஸமுத்பவௌ.

இந்நோய் ஒரு வகையில் வாதப்ரதானமாகவும் வேறு வகையில் கபப்பிரதானமாகவும் காணப்படுகின்றது. இதைத் தவிர பித்தானுபந்தத்தால் ஏற்படும் பிரதமகச்வாஸம் ஒன்று உண்டு. ஆக இது மூன்று வகைப்படுகின்றது. சிகித்ஸை நோக்கில் வேறு இருவகையாகவும் பிரிக்கலாம். துர்பலனுக்கு ஏற்படுவது, பலவானுக்கு ஏற்படுவது என.

சரகர் இதை விவரிக்கும்போது கூறும் முறை கவனிக்கத் தக்கது. "ச்வாஸரோகி இருவகைப்படுவான். பலவான் துர்பலன் என, மறுபடியும் இரு வகைப்படுவான் கபாதிகன் வாதாதிகன் என. கபாதிகனுக்கு முதலில் வமனமும் பிறகு விரேசனமும் கொடுக்கவேண்டும். பத்ய உணவுகளுடன் தூமபானம் கபத்தை இளக்கும் லேஹங்கள் இவைகளைக் கொடுக்கலாம். வாதத்திலும் துர்பலனுக்கும் பாலனுக்கும் கிழவனுக்கும் ஏற்படும் நோயிலும்

வாத சமனமான ஔஷதங்களும் நெய்ப்பு உண்டாக்குபவைகளான கஞ்சி ஸூப்பு முதலியவைகளும் கொடுத்து சரிப்படுத்த வேண்டும்.'' சரக சிகித்ஸை அத் 17.

மற்றொரு சிகித்ஸாயுக்தியையும் கவனிக்கவேண்டும். வாயுவிற்கு ஏற்படும் ஆவரணத்தைக் கவனித்தல் நல்லது. கபப்பிரதான தமகத்தில் பிராணவாயுவால் உதானவாயுவிற்கும் வாத பிரதான தமகத்தில் உதானத்தால் அபானவாயுவிற்கும் ஆவரணம் ஏற்படுகின்றது. இதன் அறிகுறிகள் பின் வருமாறு:

தலைவலி, சளி, மூச்சுத்திணறல், மார்வலி, வாய் உலர்தல் இவை பிராணவாயுவால் உதானன் ஆவரணமடைவதன் குறிகள், இவைகளில் மார்பகம், தலை இடங்களில் உள்ள கபவாதங்கள் சீரடைய வமனம் போன்ற சிகித்ஸை செய்தல் வேண்டும். உதானத்தால் அபானனுக்கு ஆவரணம் ஏற்படும்போது வாந்தி ச்வாஸம் முதலியவை ஏற்படும். இங்கு பஸ்தி அபான ஸ்தலங்களில் வாதானுலோமன சிகித்ஸை உணவு வகை பயன்படும்.

வியாதியின் ஸம்பிராப்தியைப் பரீசிலிக்கும்போது அக்னி மந்தம் வாத பிரகோபம், கபப்ரகோபம், வாயுவின் எதிர்நோக்கு (பிரதிலோமகதி) வாயு கெட்ட ச்வாஸாசய பிராணவஹஸ்ரோதஸ்) த்தில் தங்குதல், வாயுவால் கபம் வெளிக்கிளப்பப்பட்டு வழியடைத்திருத்தல். அதனால் மூச்சுத்திணறுதல் இவை கவனிக்கத்தக்கவை. இந்த ஸம்பிராப்தியை ஒட்டி, இதில் கபம் இளகவும் வெளியாகவும் வாயு அனுலோமகதி அடைந்து சமன மடையவும் பித்தம் ஜீர்ணசக்தி நேராகவும் ஸ்ரோதஸ்ஸுகளில் ஏற்பட்டுள்ள அடைப்பு விலகவும் சிகித்ஸை அவசியமாகின்றது.

இதில் நான் கையாண்ட சிகித்ஸை வழிகளை பின்னர் குறிப்பிட விரும்புகிறேன்.

கபப்பிரதான தமக ச்வாஸ சிகித்ஸை

1. வேகமதிகமாக இருக்கும்போது நல்லெண்ணெய்யில் உப்பைப் போட்டு சூடாக்கி மார்பகத்தில் தடவி ஒத்தடம்.

2. கபம் இளகி வாதம் அனுலோமமாகும் வரை அதிமதுரமும் கண்டங்கத்திரியும் இடித்துப்போட்டுக் கஷாயம் செய்து ஆவியைக் குழாய் வழியே மார்பகத்தின் மேல் படும்படி செய்து நாடீஸ்வேதம் கொடுத்தல்.

3. வாதானுலோமனம் ஏற்பட்டதும் ஆங்காங்கு ஸ்ரோதஸ்ஸுகளில் ஒட்டிக் கெட்டியாகவிருக்கும் கபம் வெளியாக உத்க்லேசனமான தயிர் அன்னம் உண்ணுதல்.

4. கபம் உத்க்லேசனமானதும் ஒரு மணி கழித்து மலங்காரைக்காய் கஷாயம் 4 அவுன்ஸ், திப்பிலித்தூள் $\frac{1}{4}$ தோலா, இந்துப்பு $\frac{1}{2}$ தோலா தேன் 2 தோலா சேர்த்துச் சாப்பிட்டு கழுத்துவரை நிரம்பும் வகையில் வென்னீர் குடித்தல். இதனுல் நன்கு வாந்தியாகி கபம் வெளிப்படும்.

5. கபம் வெளியாகி 2 மணி நேரம் கழித்து சரகரின் தூமவர்த்தியைப் புகை பிடித்தல்.

6. இதன் பிறகு தினம் காலை 7 நாட்கள் வரை சித்ரககிருதம்.

7. அந்த 7 நாட்களும் சித்ரககிருதம் சாப்பிட்டபின் நொச்சி இலை சேர்த்த வென்னீரில் வேது பிடித்தல்.

8. உடன் சிவா சூர்ணம் சாப்பிட்டு மலமிளக்கிக் கொள்ளுதல்.

9. வேகமதிகமாக இருக்கும்போது ஸிதோபலாதி சூர்ணத்தையும் அதிமதுரத்தூளையும் சதுர்புஜரஸத்தையும் தேனும் துளசிச்சாறும் சேர்த்து 10 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒரு ஸ்பூன் சாப்பிடுதல் வேகம் தணியும் வரை.

10. பிறகு ரஸாயனமாக சதுர்புஜ ரஸம் 2 யவம், திரிபலா சூர்ணம் 15 யவம், தேனும் துளசிச்சாறும் சேர்த்து தினம் இரு முறை காலை மாலை அனுபானமாக பார்ங்க்யாதி கஷாயம் 2 அவுன்ஸ், தசமூலாரிஷ்டம் 2 வேளை உணவிற்குப்பின், லவங்காதி வடி அவசியத்திற்கேற்றவாறு வாயிலடக்கிக்கொள்ள.

வாதப்பிரதான தமகசிகித்ஸை

1. வேக காலத்தில் நல்லெண்ணெய்யையும் உப்பையும் சூடாக்கித் தேய்த்துக்கொள்ளுதல்.

2. அமிருதப்ராச கிருதம் அல்லது நாராயண தைலத்தை சூடான பாலுடன் வேக காலத்தில் 2 ஸ்பூன் அளவு அடிக்கடி.

3. ஆளி விதை இந்துப்பு கலந்து வேக வைத்துச் சூட்டுடன் கட்டுதல். அல்லது சிற்றாமணக்கெண்ணெய் தடவி ஒத்தடம் கொடுத்தல்.

4. வேகம் குறைந்ததும் பாலும் சர்க்கரையும் கப உத்க்லே சனத்திற்காக.

5. தூம வர்த்தி நெய்யில் நனைத்துப் புகை பிடித்தல்.

6 கர்பூராதி சூர்ணம் வாஸாபானகத்துடன் அடிக்கடி வேகம் குறைவதற்காக.

7. அதிமதுரத்தூளுடன் சதுர்புஜரஸம் அடிக்கடி.

8. வாயு அனுலோமனமாவதற்காக பிருஹத்ஸைந்தவாதி தைலம் சூடான பாலுடன் காலையில்.

9. ரஸாயனமாக சதுர்புஜரஸம் 2 யவம் கர்பூராதி சூர்ணம் 15 யவம் தினம் காலை மாலை தேனில். அனுபானமாக பார்ங்கியாதி கஷாயம், அமிருதப்ராசகிருதம் தினம் காலையில், பிருஹத்ஸைந்த வாதி தைலம் 2 அவுன்ஸ் மாத்ராபஸ்தியாக.

பொதுவாக ஸ்நேஹனமும் ஸ்வேதனமும் செய்விப்பதால் வாதானுலோமனம் ஏற்படுகின்றது. சுவாஸ வேகம் குறைகின்றது. சமனமருந்துகளால் உடல் வலிவு மிகுந்து காணும், சுவாஸத்தில் பித்தானுபந்தமுமிருந்தால் ச்வாஸ வேகத்தைக் குறைப்பது மிகக் கடினம். ரோகிக்கு ஒத்தடம் கொடுக்கமுடியாது. கொடுக்கவும் கூடாது இவர்களுக்கு அடிக்கடி 2 அவுன்ஸ் சூடான பாலுடன் க்ளுகோஸ் அல்லது சர்க்கரை சேர்த்து, 2 டீஸ்பூன் நாராயண தைலம் சேர்த்துக் கொடுக்க நல்ல குணம் கிடைக்கின்றது. வாயுவும் கபமும் இதனல் குறைகின்றன. பித்தத்திற்கும் கெடுதல் இல்லை. பார்ங்கியாதி (32 சரக்குள்ளது). கஷாயச் சரக்குகளுடன் ஸம அளவு ஆளி விதையும் சேர்த்துக் கஷாயம் செய்து கொடுப்பதால் வாத கபானுலோமனம் நன்கு ஆகின்றது.

———

தங்கள் சந்தாவை அனுப்பிவிட்டீர்களா?

அனுப்பவேண்டிய விலாசம்:

தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம்
சின்னக்கடைத் தெரு
திருச்சி-2.

பகந்தர சிகித்ஸை

(ராஜவைத்ய ஸத்யதேவ ஸர்மா, ஜோத்பூர்)

[ராஜவைத்ய ஸத்ய தேவஸர்மா ஜோத்பூர் ராஜ்யத்திலுள்ள திரிபோலியாவில் மூல பகந்தர (பவுத்திர) நோய்களில் விசேஷக்ஞ (Specialist) ராக இருப்பவர். இவர் தாம் அனுஷ்டிக்கும் பகந்தரத்தின் சிகித்ஸை முறைகளை ஆயுர்வேத ஸம்மேளன பத்திரிகையில் வெளியிட்டுள்ளதை இங்குச் சுருக்கித் தருகிறோம். பகந்தரம் வந்த இடத்தை உணர்ச்சியறச் செய்யும் சிகித்ஸைக்கு உதவும் இரு ஸத்வங்களைத் தவிர மற்றவை யாரும் செய்து பார்க்கக் கூடியவையே.]

ஐந்து வகை பகந்தர நோய்களின் விவரணம் நமது நூல்களில் காணப்படுகிறது. நூற்றுக்கணக்கான துவாரங்களுடன் கூடிய சதபோநகம், ஒட்டகைக் கழுத்துபோல் வெளியே நீண்டு நிற்கும் உஷ்ட்ரக்ரீவம், எப்பொழுதும் கசிவுடனிருக்கும் பரிஸ்ராவீ, துவாரம் நேராக இல்லாமல் சங்கின் சுழல் போல வளைந்து வளைந்து செல்லும் சம்பூகாவர்த்தம் – இந்த வகைப்பட்ட நோய்கள் ஆரம்பித்தபோதே கவனிக்கப்படாததாலோ, கிருமிகள் உத்பத்தியாவதாலோ உள்புறம் புரையோடும் உந்மார்க்கீ என்ற இவ்வைவகை பகந்தரங்களும் இன்றும் அனுபவத்தில் காணப்படுகின்றன.

குதப்ரதேசத்தில் காணப்படும் புரையே (நாடிவ்ரணம்) பகந்தரமாகும். இப்புரை குதவாயின் வெளிப்புறத்தில் பக்கத்தில் ஆரம்பித்து குத வழியில் உட்புறம் வரை சென்றிருந்தால் பூர்ணமான (complete rectal fistula) பகந்தரமாகின்றது. உட்புறத்தில் மாத்திரம் புரை ஏற்பட்டு வெளிப்பக்கத்தில் துவாரமேற்படாமலிருக்கலாம் (Internal Rectal Sinus or Blind Internal Fistula). வெளிப்புறத்தில் புரை ஏற்பட்டு உட்புறம் புரைத்துவாரம் ஏற்படாமலிருக்கலாம் (External Rectal Sinus or Blind Internal Fistula). உள்பக்கமோ வெளிப்பக்கமோ ஏற்பட்ட விரத்தி (கட்டிச்சிரங்கு) தான் இதற்குக் காரணம். இந்தப் புரை சரியாகச் செய்யாமலிருந்தால் பூர்ண பகந்தரமாவதும் உண்டு.

சிகித்ஸை: பகந்தர ஆரம்பத்திலேயே கஷாயங்களால் ஸேசனம், வெதுப்பித்தல், ரத்தத்தை வெளியாக்குதல் முதலியவை செய்து கட்டி பழுக்காதவாறும் உடையாதவாறும் பார்த்துக்

கொள்ள வேண்டும். பழுத்து உடையும் போதும் இவ்வியாதி கடுமையாகின்றது.

பகந்தரக்கட்டி கிளம்பியவுடனேயே சுக்கு ஆலிலை மூக்கரட்டைவேர் பழைய செங்கல் தூள் இந்த நான்கையும் ஜலம் விட்டு நன்கரைத்து தினமும் 3, 4 தடவை தடவி வர கட்டி பழுக்காமல் அமுங்கி கரைந்துவிடும்.

பிச்சி இலை, ஆலம் துளிர், பச்சை சீந்திற்கொடி, சுக்கு, இந்துப்பு இவைகளை மோர்த் தெளிவு விட்டு அரைத்து அடிக்கடி தடவி வர கட்டிகள் அமுங்கும்.

மாசிக்காய், மிளகு, அபின், திராக்ஷை இவைகளை ஜலம் விட்டு நன்கு அரைத்து அடிக்கடி தடவி வர கட்டிகள் அமுங்கிக் கரையும். பழுத்து உடைந்த கட்டிகளிலும் முளை சீக்கிரம் வெளியாகி புண் சுத்தமாகக் காயும்.

வேப்பிலை, கருப்பு எள், மஞ்சள், கடுக்காய், மரமஞ்சள், சிற்றாமுட்டிவேர், ஓட்டடை வகைக்கு ஒரு தோலா, வெள்ளை லோத்திரப்பட்டை 2 தோலா, இவைகளை ஜலம் விட்டரைத்துச் சுட வைத்துப் பத்துப் போடவும் இதனால் புண் ஆறி தூர்ந்துவிடும். வலியும் குறையும்.

பகந்தரந்தில் புரை பூர்ணமாகியிருந்தால் க்ஷாரநூல் கொண்டு அதை அறுக்க வேண்டும். பகந்தரத்தின் வெளி வாயை கார்பாலிக் ஆஸிட் கொண்டு சுடவேண்டும். பின் வளைவுஊசி (Fistula needle) யை புரையின் உள் செலுத்தி ஆஸன வழி வெளியே விரல் கொண்டு வெளிக் கொணர வேண்டும். பிறகு ஸ்பிரிட்கொண்டோ வேறு வகையிலோ சுத்தி செய்த கெட்டியான பட்டுக்கயிறை ஊசியின் காதில் செலுத்தி ஊசியை வெளியே எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு அந்த இடத்தில் உணர்ச்சியற்றுப்போக ப்ரொகைன் 2% அல்லது நொவாகைன் 2% இஞ்செக்ஷனோ அல்லது கரவீரஸத்வம் 1/12 கிரைனும் அஜாசிருங்கீஸத்வம் 1/6 கிரைனும் கலந்த லோஷனின் இஞ்செக்ஷனோ செய்யவேண்டும். நன்கு உணர்வற்றுப்போனதும் புரையினுட் செலுத்திய நூலில் லிக்கர் பொடாஸி ஹைட்ராக் ஸைட் நனைத்து நூலின் இரு நுனிகளையும் பிடித்துக் கொண்டு ரம்பம் போலறுக்க ரத்தம் வெளியாகாமல் புண் அறுபடும். பிறகு புண்ணை புளித்தமோர் அல்லது காடிவிட்டு அலம்பித் துடைத்து கொம்பரக்குத் திரவத்தை சீலைத் துணியில் (Gauze) நனைத்துக் கட்டவும்.

(166-ம் பக்கம் பார்க்க)

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M|s. Kalia Brothers (Regd.)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram : KALIA

Phone : **Office - 3232**
Resi. - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு
அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,
ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி : KALIA

போன் : ஆபீஸ் – 3232
வீடு – 4343

தந்தி : "அம்ருதம்"   P. B. No. 1382.   போன் : 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

**உண்மையான ஆயுர்வேத
மருந்துகளுக்கும்
சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்**

——— எங்களுடைய கிளைகள் : ———

1.	23-B, பூஸா ரோடு, புது டில்லி-5	போன் : 585687
2.	மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,, 2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,, 85752
4.	வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-16	,, 32336
5.	பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1	,, 92
6.	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,, 195
7.	கடைவீதி, பொன்னனி	,, 41
8.	ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1.	,, 738
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,, 87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு	
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18	33758
12.	இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2	,, 4891
13.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2	842
14.	No. 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னனி)	31
15.	ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1	

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும, வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேறறும.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5.

பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5-50
— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில் தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

இம்ப்காப்ஸ்

புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது புராதன மருந்துகளை தயாரிப்பதில நவீன பாககிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காபஸ் புராதன இந்திய மருநதுகள் சமபநதமாக ஒரு மறு மலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

maa/IMP/961/M TAM

Impcops

உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெறற நிறுவனம்

இம்ப்காப்ஸ் மருநதுகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.

அடையார், சென்னை 20.

விற்பனை நிலையங்கள்: 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8653

48, ஸொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.